திகதி – 2023.01.09

**மஸ்கெலியா பிரதேச சபையின் 2023.01.09 சபையமர்வு அறிக்கை**

2023.01.09ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும்.

## 1. கடந்தகால சபை அறிக்கையை சமர்ப்பித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நவம்பர் மாதம் நடைபெற்ற சபையமர்வில் நான் முக்கியமான இரண்டு விடயங்கள் தொடர்பாக விசேட பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தேன், நல்லதண்ணி பிரதேசத்தில் அதிகரித்து வரும் மதுபானசாலைகள் தொடர்பாக பேசியிருந்தேன் அதுவும் சபையறிக்கையில் வரவில்லை, அடுத்ததாக ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக குறிப்பிட்டிருந்தேன் அதற்கும் கடிதம் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது அது தொடர்பாக நான் குறிப்பிட்ட விடயங்கள் அறிக்கையில் வரவில்லை. ஆனால் கௌரவ உறுப்பினர் விசேட பிரேரணையாக கொண்டு வந்துள்ள இவ்விடயம் அறிக்கையில் வந்துள்ளது, இவ்விடயம் எனக்கு மிகவும் மனவேதனையை அளிக்கின்றது. எக்காரணம் கொண்டும் விசேட பிரேரணை போட மாட்டேன் என தவிசாளர் அவர்கள் கூறியிருந்தீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்தமுறை கௌரவ உறுப்பினரின் விசேட பிரேரணையினை ஏனைய உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதன் காரணமாக தான் அதற்கு அனுமதி வழங்கினேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நானும் ஏனைய கௌரவ உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று கடிதம் வழங்கியிருந்தேன், அப்படி இருந்தும் எனது பிரேரணை அறிக்கையில் வரவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த மாத சபையமர்வின் போது நான் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த ஆயர்வேத வைத்தியசாலை தொடர்பாகவும், கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் நல்லதண்ணியில் கடமை புரியும் சுகாதார கள உத்தியோகத்தர் தொடர்பாகவும் கருத்து தெரிவித்திருந்தோம் அவ்விடயங்கள் அறிக்கையில் இல்லை. அவ்விடயத்திற்கு தவிசாளர் அவர்களும் பதிலளித்து இருந்தீர்கள். இவை கலந்துரையாடப்பட்டுள்ளதாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, இதற்கு தவிசாளர் அவர்கள் 02 பதில் அளித்திருந்தீர்கள். ஒன்று அங்குள்ள பிரதான மதகுரு அவர்கள் அந்த உத்தியோகத்தரை பணிக்கு அமர்த்துமாறு குறிப்பிட்டிருந்ததாக கூறினீர்கள். இன்னொன்று அங்குள்ள உத்தியோகத்தரை வேலையில் ஈடுப்படுத்தினால் மாத்திரமே அங்குள்ள பணிகளை முறையாக முன்னெடுக்க முடியுமென கூறியிருந்தீர்கள். ஒலி பதிவிற்கு அமைய அவ்விடயங்கள் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் நன்மையாக அமைந்திருக்கும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையறிக்கையில் கௌரவ உறுப்பினர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது, கருத்து தெரிவிக்கப்பட்டது என்று கிட்டதட்ட 02 பக்கங்களுக்கு மேல் உள்ளது. இங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மேலிடத்திற்கு செல்லுமா?

திகதி – 2023.01.09

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

பிரேரணையில் உள்ள விடயங்கள் அனைத்தும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இருந்தாலும் முக்கியமாக கருத்துக்கள் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவை மேலிடத்திற்கு செல்ல வேண்டும் தானே? ஒலிப்பதிவிற்காக மாத்திரம் பேசுவதில் எந்த பயனும் இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

பிரேரணை தொடர்பாக விடயங்கள் அனைத்தும் இணைக்கப்படும் அதற்கு மேலதிகமாக மிகவும் முக்கியமான விடயங்கள் இருந்தால் அவற்றையும் இணைக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஏதாவது கடிதங்கள் முன்வைக்கப்படும் போது அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு குறிப்பிட்ட விடயங்கள் அறிக்கையில் இல்லாவிட்டால் அது சிக்கல் நிலையினை ஏற்படுத்தும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இனிவருங்காலங்களில் முக்கிய கருத்துக்களை இணைத்துக்கொள்ளுவோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் கௌரவ உப தவிசாளர் கொண்டு வந்திருந்த மீன்கடை தொடர்பான விடயம் சம்பந்தாக கௌரவ உறுப்பினர் ஆனந்தராஜ் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது, அக்கடையினை அங்கேயே வைப்பதாக அகற்றுவதா என எவ்வாறு நாம் தீர்மானம் மேற்கொண்டோம் என்பதற்கு ஒரு ஆதாரம் வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக பொது சுகதார பரிசோதருடன் பேசி அவர்களுக்கும் தெளிவுப்படுத்தியுள்ளோம். சபைக்கு வருமானம் வரும் வழியினை நாம் பாதிக்கவிட கூடாது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாத சபையறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.12.12 ம் திகதி நடைபெற்ற சபையமர்வின் அறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 2. கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட அறிவித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக எனது விசேட பிரேரணையில் மஸ்கெலியா மற்றும் பிரவுன்லோ பிரதேசங்களில் காணி உறுதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகிய கௌரவ உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்கள் மற்றும் கௌரவ இராமேஸ்வரன் அவர்களின் கவனத்திற்கு

கொண்டு சென்றதற்கமைய மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய பிரதேச சபையின் கட்டிட அனுமதி 02 பேர்ச்சர்ஸ்றகு குறைவான கட்டிடங்களுக்கு மார்ச் 31 திகதிவரை சிபாரிசு வழங்க சபை தீர்மானமொன்றை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் உண்மையில் ஒரு நல்ல விடயம், கட்டாயமாக செய்யப்பட வேண்டிய விடயம். அத்தோடு அத்துமீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக பரிசீலனை செய்துவிட்டு பின்னர் வழங்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிறைய கட்டிடங்களுக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

காணி உரிமை கோரல் தொடர்பாக மீரியாகொட பிரதேசத்தையும் நாம் இணைத்திருந்தோம். நவம்பர் 23ம் திகதி கொழும்பிலுள்ள LRC காரியாலயத்திற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்கள் கூறியதற்கு அமைய முன்னாள் விவசாய சங்கத்தின் தலைவர் தியாகராஜா அவர்களை அங்கு அனுப்பியிருந்தேன், அங்கு மொத்தமாக 253 பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோம். அங்கு காடாக உள்ள இடங்களை காணி ஆணைக்குழுவில் எடுப்பதாக கதை ஒன்று உள்ளது. தோட்டப்புறங்களில் உள்ள காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்க தோட்ட நிர்வாகம் சரி கிராம உத்தியோகத்தர் சரி கடிதம் வழங்க வேண்டும். இது தொடர்பாக தவிசாளர் அவர்கள் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மார்ச் மாதமளவில் பிரவுன்லோவில் உள்ள நோட்டன் வீதி முழுவதும் தொடர்பாக பிரேரணை முன்வைத்திருந்தேன், அப்பிரேரணையில் அங்குள்ளவர்களுக்கு எவ்வித பதிவும் இல்லை என்று குறிப்பிட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு கடிதமனுப்பப்பட்டு அங்கிருந்து பிரதேச செலயகத்திற்கு அறிவிக்கப்பட்டு விட்டாலும் இது தொடர்பாக தேடிபார்க்கும் படி கூறியிருந்தனர், அதற்கினங்க கிராம சேவருக்கு விடயம் கொண்டு அவருக்கும் இது தொடர்பான முழுமையான விடயம் தெரியவில்லை என்று கூறியதற்கு அமைய, அதன் பின்னர் 06மாதமளவில் நோட்டன் வீதியிலுள்ள அனைவருக்கும் இடம் கச்சேரி தொடர்பாக அறிவித்தல் வழங்கப்பட்டது. ஒரு சில விடயங்களுக்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அவ்விடயம் தொடர்பாக வந்த பெயர்பட்டியலில் குடா மஸ்கெலியா கிட்டதட்ட 70 காணிகளுக்கு எடுத்துவிட்டு, மஸ்கெலியாவிற்கும் எடுத்துவிட்டு நோட்டன் வீதியிலுள்ள எந்தவொரு இடத்திற்கும் இடம் பரிசீலனை செய்யவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தற்போது தான் மஸ்கெலியாவில் அவ்வேலைகள் நடைபெற்றுக்கொண்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

உண்மையில் இவ்விடம் யாருக்கு சொந்தமானது என்று தெரிய வேண்டும், காசு உள்ளவர்களுக்கு ஒருவாறும் காசு இல்லாதவர்களுக்கு ஒருவாறும் நடைபெறுகின்றது எனவே உரிய இடத்திற்கு கடிதமனுப்பி தீர்வினை பெற்றுத்தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதற்கென தனியாக குழு அமைத்து அதன் மூலமாக தான் வேலை நடைபெறுகின்றது, அவ்வாறானால் குழுவிற்கு தான் கடிதமனுப்ப வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இன்று எமது மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களிலே நகர்புறத்தை மாத்திரம் மையப்படுத்தி காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றது, இதை தவிர தோட்டப்புறங்களிலே காலங்காலமாக உள்ளவர்கள் உள்ளனர், அவர்களுக்கு எவ்வித அனுமதிப்பத்திரமோ

எதுவுமோ இல்லை. இதையும் நாம் கருத்திற்கொண்டு அவர்களுக்கும் ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். உதாரணமாக லக்கம் பிரதேசத்தில் உள்ளவர்கள் எவ்விதத்திலோ அவர்களின் தொழிலை விரிவுப்படுத்தவோ அல்லது கட்டிடத்தை விரிவுப்படுத்திக்கொள்ள முடியாத நிலை உள்ளது. காரணம் அவர்களுக்கான காணி உறுதிப்பத்திரமோ, அனுமதிப்பத்திரமோ இல்லை. இவ்வாறான பிரச்சினையில் உள்ளவர்களுக்கு இதனை நிவர்த்தி செய்து தர இந்த இறுதி தருணத்தில் சரி ஏதாவது ஒரு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக ஒரு கூட்டம் ஒன்றை நடத்தினோம், அதன் பின்னர் அதற்கான ஏற்பாடு ஒன்றும் செய்யப்படவில்லை, இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்போம்.

**தீர்மான இல 02**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 2023 மார்ச் 31ம் திகதிக்கு முன்னராக காணி உறுதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான விசேட வேலைத்திட்டத்திற்கு அமைய மஸ்கெலியா பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட 02 பர்ச்சஸ்ற்கு குறைவான காணி அளவை கொண்ட கட்டிடங்களுக்கு அனுமதியினை பெற்றுக்கொடுக்க சபை ஏகமானதாக சிபாரிசு செய்தது.

## 3. பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் முறைப்பாடுகளை சபைக்கு முன்வைத்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - கௌரவ உப தவிசாளர் பி.பி.பிரதீபன் அவர்கள்.

**விடயம்** - 2023.01.09ம் திகதி சபையமர்விற்கான விடுமுறை கடிதம்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள்.

**விடயம்** - 2023.01.09ம் திகதி சபையமர்விற்கான விடுமுறை கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர்களின் விடுமுறையினை நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 03**

கௌரவ உறுப்பினர்களின் விடுமுறைக்கு சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 03**

திகதி – 2023.01.09

**அனுப்புனர்** - வனஜீவராசிகள் திணைக்களம்.

**விடயம்** - மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் பாம்பு மற்றும் குரங்கு தொல்லை தொடர்பான கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - தீபாவளி பண்டிகை காலத்தில் கடையறைகளை டெண்டரில் வழங்கியிருந்தமை தொடர்பான கடிதம்.

-

## 4. நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த சாமிமலை வாசிகசாலைக்கான பத்திரிகை கொள்வனவு மற்றும் சாமிமலை வாசிகசாலையில் உள்ள குறைபாடுகள் புத்தகங்களின் குறைபாடுகள் தொடர்பாக கௌரவ உறுப்பினரினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

ரிக்காடன் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பணிப்புரியும் ஊழியர்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினரினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

## 5. பிரேரணைகள்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எனது முதலாவது பிரேரணையானது ரிக்காடன் கழிவு முகாமைத்துவ நிலையம் தொடர்பானதாகும். எமது சபை ஆரம்பித்து 05 வருடங்களாக போகின்றது. இது மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட எல்லையில் உள்ளது. ஆனால் அம்பகமுவ பிரதேச சபையின் காலகட்டத்தில் இந்த கழிவு முகாமைத்துவ நிலையம் நிர்வகிக்கப்பட்டதன் காரணமாக அதிலிருந்து எமக்கு விடுவிக்கப்பட்டுள்ளதா இல்லை என்றால் அம்பகமுவ நிர்வாகத்தின் கீழ் தான் உள்ளதா என்பதில் சந்தேகம் ஒன்று உள்ளது.

திகதி – 2023.01.09

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இந்த சபை பிரிக்கப்பட்ட போது இங்கு சபைக்குட்பட்ட அனைத்து தாஸ்தாவேஜிகளையும் வழங்கியிருக்க வேண்டும், ஒரு சில கோவைகளை வழங்கவில்லை. இக்கோவைகள் கிடைக்கவில்லை என்று ஆணையாளர் அவர்களுக்கும் கடிதம் அனுப்பியும் உள்ளோம். விசாரணை அதிகாரிக்கும் இவ்விடயம் தொடர்பாக அறிவித்துள்ளோம். அங்குள்ள அனைத்து திருத்த வேலைகள் பாராமரிப்பு வேலைகள் அனைத்தையும் நாம் தான் செய்கின்றோம். அண்மையில் ரிக்காடனில் உள்ள கழிவு முகாமைத்துவ நிலையத்தின் இடம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தில் ஏற்பட்ட பிரச்சினையின் போது கூட கோவை எம்மிடம் இருக்கவில்லை, அப்பிரச்சினையின் போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு தெரிவித்து வனஜீவராசிகள் திணைக்களத்தினருடன் பேசி சபையின் கழிவுகளை அகற்ற இன்னும் கொஞ்சம் இடம் தருமாறு கேட்டிருந்தோம். இது தொடர்பாகவும் கடிதம் அனுப்பியுள்ளோம். கடந்த வாரம் 26ம் திகதி எங்களுடைய செயலாளரையும் அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளரையும் ஒரு ஒப்பந்த அடிப்படைக்கு செல்ல உதவி ஆணையாளர் அழைத்திருந்தார். நான் அனுப்ப முடியாது என்று கூறிவிட்டேன். JCB இற்கான கடிதத்தை மாத்திரம் வழங்கலாம் என்று கூறினேன். வெகு சீக்கிரத்தில் இதற்கான நடவடிக்கை எடுப்பதாக உள்ளூராட்சி துணை ஆணையாளர் அவர்கள் கூறியுள்ளார்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

உண்மையில் அம்பகமுவ பிரதேச சபையினை பொருத்த வரையில் அவர்களுக்கு கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் மட்டுமல்ல சிவனொளிபாதமலையும் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பதனால் ஆரம்பத்தில் இருந்தே அதனை விட்டுதராமல் உள்ளனர். சபை ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களாகியும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயம். இது தொடர்பாக அனைவருக்கும் தெரியும். ஆனால் இவ்வளவு காலமும் இது தொடர்பாக இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஏன் என்று தெரியவில்லை. தமிழ் தவிசாளரை கொண்ட பிரதேச சபை ஆகையால் இச்சபைக்கு இதனை வழங்க கூடாது என்று நினைக்கின்றனரா, அல்லது இந்த கழிவு முகாமைத்துவத்துவத்தை தாங்களின் கட்டுப்பாட்டுடன் கீழ் வைத்துக்கொண்டு அபிவிருத்திகளை மேற்கொள்ள இவ்வாறு செய்கின்றனரா என்று தெரியவில்லை. இவற்றுக்கான உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அடுத்து வரும் சபைக்கு இது ஒரு சுமையாக இருக்க கூடாது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

இந்த சபை ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்களாகின்றது இச்சபைக்குட்பட்ட அனைத்து விடயங்களும் எமது கட்டுப்பாட்டின் கீழ் தான் இருக்க வேண்டும். எனவே இதனை முறைப்படி எமது சபைக்கு பெற்றுத்தர சபையில் ஏகமானதாக தீர்மானமெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ரிக்காடன் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் ஏனைய சபைகளில் இருந்து கழிவுகளை கொண்டு வருதல் அவற்றை நிறுத்துதல் தொடர்பாக கடந்த கால சபைகளில் நானும் கருத்து தெரிவித்திருந்தேன். அத்துடன் ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்திலே முன்னெடுக்கின்ற விடயம் தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தேன். கௌரவ தவிசாளர் அவர்களே இவ்விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினர் பிரேரணை முன்வைத்து பேசும் வரைக்கும் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் அசமந்த போக்கில் இருப்பதாகவே என்னுடைய கருத்து உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே இது தொடர்பாக பலமுறை கடிதம் அனுப்பி, நேரடியாகவும் சென்று பேசியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடிதங்கள் அனுப்பியுள்ளீர்கள், எமக்கு பெருளாதார ரீதியில் செல்வாக்கு செலுத்தும் இவ்விடயம் தொடர்பாக உள்ள மத்திய நிலையத்தை எமது அதிகாரத்தின் கீழ் வைத்துக்கொள்ள முடியாதது ஒரு பிரச்சினையாக இருக்கும். இது வரை எடுத்த நடவடிக்கைகள் எதுவும் இன்னமும் வெற்றியளிக்காததனால் சபையின் அனைவரும் ஒன்றிணைந்து சபைக்கு முன்பாக கழிவு முகாமைத்துவ நிலையத்தை எமது சபைக்கு பெற்றுத்தரும்படி கோரலாம். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு நடக்காவிட்டால் அதற்கு யார் தடையாக உள்ளனர் என்பதனை கண்டறிய வேண்டும். மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நானும் செயலாளர் அவர்களும் டிரக்கடர் சம்பந்தமாக சென்ற போது அங்கு சொல்லப்பட்டது இதனை அபிவிருத்தி செய்ய பல உதாரணங்களை காட்டினர். எமக்கு நிதிக்கிடைக்கும் வழியினை நாம் தடை செய்ய முடியாது.

**தீர்மான இல 04**

ரிக்காடன் கழிவு முகாமைத்துவ நிலையம் தொடர்பாக உடனடியாக அதன் ஆவணங்களை மஸ்கெலியா பிரதேச சபைக்கு கோரி கௌரவ ஆளுனர் மற்றும் உள்ளூராட்சி துணை ஆணையாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எனது அடுத்த பிரேரணையாக சபைக்கான கலி இயந்திரத்தை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அடுத்த பிரேரணையினை சமர்ப்பித்துள்ளேன், உண்மையில் கலி சம்பந்தமாக சகல உறுப்பினர்களும் வலியுறுத்தியிருந்தாலும் கூட இதற்கு முதலாவதாக அத்திவாரமிட்டவர் கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்கள். 28.05.2018ம் ஆண்டில் இவரது பிரேரணை போடப்பட்டிருந்தது. மஸ்கெலியா பிரதேச சபைக்கு ஒரு கலி இயந்திரத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பிரேரணை முன்வைத்திருந்தார் அதனை கூட கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்கள் ஏற்றுக்கொண்டு பேசியிருந்தார். எல்லா உறுப்பினர்களுமே இது தொடர்பாக பேசியிருந்தனர். அவர்களது சகல கருத்துக்களை ஏற்றுக்கொண்டு சபை நிதியினூடாக கலி இயந்திரத்தை பெற்றுக்கொண்டது வரவேற்கத்தக்க விடயம். இது மக்களுக்கு நாம் செய்யும் பாரிய சேவையாக இது அமையும். கலி இயந்திரத்தை பற்றி கூறப்போனால் அண்மையில் அம்பகமுவயில் மஸ்கெலியாவிற்கு இனி வழங்க மாட்டோம் என்று கூறியிருந்தனர். ஏன் அவ்வாறு கூறினர் என்று தெரியவில்லை. இவ்வியந்திரத்தை சபைக்கு பெற்றுக்கொடுத்த தவிசாளர் அவர்களுக்கும் செயலாளர் அவர்களுக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் சபை சார்பிலே நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எமது சபை அம்பகமுவ பிரதேச சபையில் இருந்து 03ஆக பிரிக்கப்பட்டு மஸ்கெலியா பிரதேச சபைக்கு பாரிய வருமானத்தை நாம் அம்பகமுவ பிரதேச சபைக்கு பெற்றுக்கொடுத்துள்ளோம். சபை பிரிக்கப்பட்டு எமது சபை ஆரம்பிக்கப்பட்ட போது எமக்கு கிடைக்க வேண்டிய ஒரு வளமும் சரியாக கிடைக்கப்பெறவில்லை. 28.05.2018ம் ஆண்டு காலத்திலே இது தொடர்பாக நான் சபையில் தெளிவாக பேசியிருந்தேன். எமது சபைக்கு உள்ளூராட்சி துணை ஆணையாளர் அவர்கள் வந்திருந்த போது கூட இவ்விடயம் தொடர்பாக தெரிவித்திருந்தேன். மக்களுடைய நிதியிலிருந்து கலி இயந்திரத்தை பெற்றுக்கொள்ள 05 வருடமாகி இருக்கின்றது. இவ்வியந்திரத்தை பெற்றுக்கொள்ள தலவாக்கலை, அட்டன், அம்பமுவயினை நாடி தான் இவ்வியந்திரத்தை பெற்றுக்கொள்ள நேரிட்டிருந்தது. கழிவு அகற்றுதல் எங்களிடம் இருந்து தான் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் பணத்தில் இருந்து கலி இயந்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்ட தலைவர் செயலாளர் உட்பட அனைத்து உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் அவர்கள் பிரேரணை முன்வைத்த விடயம் தொடர்பாக எனக்கு தெரியாது, அதன் பின்னர் 06 மாதம் கழித்து இப்பிரேரணையினை மீண்டும் சபைக்கு கொண்டுவந்திருந்தேன், அன்றைய தினம் தீர்மானம் எடுக்கப்பட்டு அனைவருக்கும் கடிதம் அனுப்புமாறு கூறியிருந்தேன், அதனை எனது முகநூலிலும் பதிவிட்டிருந்தேன். அதன் பின்னர் தற்போதுள்ள ஆளுனரினை சந்திக்க நேரம் கிடைத்த போது தாங்களும் கோவை ஒன்றை வழங்கியிருந்தீர்கள், நானும் தனிப்பட்ட ரீதியில் மஸ்கெலியா வைத்தியசாலை மற்றும் கலி இயந்திரம் தொடர்பாக கடிதம் ஒன்றை வழங்கியிருந்தேன். அப்போது சபை உட்பட நிதிக்குழு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டிருந்தோம். அண்மையில் தாங்கள் போட்டிருந்த முகநூல் பதிவு மிகவும் மன வேதனையை ஏற்படுத்தியிருந்தது. அதன் பின்னர் தான் நானும் அனைவரையும் உள்ளிட்டு நன்றி கூறி பதிவொன்றை இட்டிருந்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நாங்கள் ஆளுனருக்கு கடிதம் அனுப்பினோம், நேரில் சென்று சந்தித்தோம், அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டிருந்தோம். அதன் பின்னர் பல்லேகலவிற்கு நானும் செயலாளரும், எமது தொழிநுட்ப உத்தியோகத்தரும் சென்றிருந்தோம். அங்கு வங்கி கடன் தொடர்பான அனுமதியினை பெற மிகவும் சிரமத்திற்கு முகங்கொடுத்தோம். பல தடவைகள் இவ்வாறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். இவற்றை ஒவ்வொரு முறையும் நான் வெளியில் கூறிக்கொண்டிருக்க முடியாது. ஒரு விடயத்தை கூறுவது இலகு அதனை நடைமுறைப்படுத்தி பார்க்கும் போது தான் அதிலுள்ள பிரச்சினை தெரியும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் உட்பட நான் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தான் தவணை முறையில் கலி இயந்திரத்தை பெறுவோம் என்று கூறியிருந்தோம். தாங்கள் கஸ்டப்பட்டதை நான் ஒன்றும் கூறவில்லை. அனைவரின் உழைப்பும் இதில் உள்ளது என்பதனை தான் கூறியிருந்தேன்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கௌரவ தவிசாளர் அவர்களே, தாங்கள் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். ஏதாவதொரு நிறுவனத்திற்குச் சென்று ஒரு பொருளை கொள்வனவு செய்வதாயின் அதனை கடமை ரீதியான அர்ப்பணிப்புடன் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அது தாங்களது பொறுப்பாகும். அதே போல ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அம்மக்களின் தேவைகளை சபையிலே முன்வைத்து. குறைபாடுகளை சுட்டிக்காட்டுவது அப்பிரதிநிதிகளின் பொறுப்பாகும். அனைவரினதும் அர்ப்பணிப்பினால் ஏதாவது ஒரு பொருள் இவ்விடத்திற்கு கிடைத்துள்ளது. இதனை நான் செய்தேன், அதனை நான் செய்தேன் என்று யாரும் புள்ளிகளை போட்டுக்கொள்ள முடியாது. எமக்கு எத்தனை அலுவல்கள் காணப்பட்டாலும் கூட, தேவையான சந்தர்ப்பத்திலே இவ்விடத்திற்கு வந்து முகங்கொடுத்து, அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம். இதற்காக சபையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் அதற்கான உரிமை கிடைக்கப்பெற வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இச்சபையின் மிகப்பெரிய வெற்றியினை சபை பெற்றுள்ளது என்று தான் கூற வேண்டும். சபை ஆரம்பிக்கப்பட்டு முதலாவது சபையிலே பிரேரணை முன்வைத்து நிறைவேற்றப்பட்டு 02 வருடத்திற்கு முன்னர் இது கிடைத்திருந்தால் சபைக்கான பாரிய வருமானத்தை நாம் பெற்றிருக்கலாம். உள்ளூராட்சி நிறுவனம் பாராபட்சம் காட்டுவதாக கடந்த காலங்களிலே நான் கூறியிருந்தேன். பாரிய அசௌகரியத்திற்கு மத்தியிலே இதனை பெற்றுக்கொண்டதாக தவிசாளர் அவர்கள் கூறியிருந்தீர்கள். தொழிலாளர்களை உள்ளீர்ப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது இவ்வியந்திரத்தை பெற்றுக்கொள்ள பங்களிப்பு செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கலி இயந்திரத்தை பெற்றுக்கொண்டமைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு J.C.B இயந்திரம் மற்றும் நீர் பவுசரினை கொள்வனவு செய்யவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். J.C.B இயந்திரம் காணப்படுமாயின் அதுவும் சபைக்கு பாரிய வருமானத்தை பெற்றக்கொடுக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நீர் பவுசருக்கு கடிதமும் அனுப்பியுள்ளேன், நேரிலும் சென்று பேசியுள்ளேன், வெகு விரைவில் அது கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

## 07. ஏனைய விடயங்கள், விசேட அறிவித்தல்கள் மற்றும் எதிர்வரும் சபைக்கான திகதியை அறிவித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எல்லை நிர்ணயம் தொடர்பாக அரசாங்கத்தினால் சில வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. 02 வட்டாரங்களை ஒன்றாக இணைத்து அதனூடாக செயற்பட திட்டமிட்டுக்கொண்டுள்ளனர். இதனால் அதிகம் பாதிக்கப்பட போவது மலையக பிரதேசத்தை தேர்ந்த நாங்கள் தான். இங்குள்ள வட்டாரங்களில் அதிகளவு சனத்தொகை உள்ளது, ஏனைய பிரதேசங்களில் இவ்வாறு காணப்படுவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. 9000 கொண்ட ஒரு வட்டாரமாக நாம் தெரிவு செய்யப்படுவோம் ஏனைய பிரதேசங்களில் 3000, 4000 கொண்டது ஒரு பிரதேசமாக காணப்படும். ஆகவே இந்த எல்லை நிர்ணயம் என்பது எமது பிரதேசத்திற்கு சாதகப்படாது. இவ்விடயம் இரகசியமாக தான் நடந்துள்ளது. அரசியல் கட்சி பிரமுகர்களை அழைத்து இது தொடர்பாக பேசிய போது எமது தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இவ்விடயத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். எல்லை நிர்ணம் செய்யப்படுமாயின் அது எமது பிரதேசத்திற்கு ஏற்றவாறும், முழு இலங்கைக்கும் வாக்காளர் அடிப்படையில் எவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படுகின்றதோ அவ்வாறு இப்பிரதேசத்திற்குதம் செய்யப்பட வேண்டும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். கழிவு முகாமைத்துவ நிலையமும் சிவனொளிபாதமலையும் எமது

பிரதேசத்தை விட்டு இன்னொரு பிரதேச சபைக்கு செல்லும் என்பதில் எந்த அச்சமும் இல்லை. இவற்றை சுட்டிக்காட்டவே இப்பிரேரணையினை நான் முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் கொண்டுவந்த பிரேரணையினை வழிமொழிவதோடு, குறிப்பாக அண்மையில் முன்னாள் தேர்தல் ஆணையாளரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட எல்லை மீள் நிர்ணய குழு மேற்கொண்ட நடவடிக்கையினை தமிழ் அரசியல் கட்சிகள் நிராகரித்து கருத்து தெரிவித்திருந்த போதும் எந்த அமைப்பும் எல்லை நிர்ணய குழுவிற்கான பரிந்துரையினை முழுமையாக செய்யவில்லை. முன்மொழிவுகளை கோரியிருந்தனர். மஸ்கெலியா அதிகார பிரதேசத்தினுள்ளே வட்டாரத்தினுடைய எண்ணிக்கை உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு பிரதேசங்கத்தில் உள்ள சபைகளில் எல்லா பிரேரணைகளும் இந்த சமூகம் சார்ந்த பிரேரணையாகவே இருக்கும். அண்மை காலமாக எமது பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் உரிமை தொடர்பான விடயங்களை நாம் முன்வைப்பது குறைவு. சில விடயங்களுக்கு உடனடியக தீர்வை பெற்றுக்கொடுத்து விட்டால் எமது சமூகம் மேலோங்கி விட்டதாக நினைத்து விட்டோம், ஆனால் இன்று கௌரவ உறுப்பினர் கொண்டுவந்துள்ள பிரேரணை காலத்தின் தேவைகேற்ற பிரேரணை. எனது வட்டாரத்தில் கூட அதிகளவு வாக்காளர்கள் உள்ளனர். வட்டாரங்களை குறைக்கும் போது மஸ்கெலியா பிரதேச சபை 06 வட்டாரங்களாகவும் மேலதிகமாக 04 பட்டில் உறுப்பினர்களை கொண்டு 10 உறுப்பினர்களாக சுருக்கும் போது தற்போது உள்ள எண்ணிக்கை குறைக்கப்படும். இதற்கு எதிர்ப்பை தெரிவித்து மஸ்கெலியா பிரதேச சபை பிரேரணை நிறைவேற்றியுள்ளது என்ற விடயத்தை கொண்டு செல்ல ஏகமானதாக தீர்மானத்தை எடுத்து பிரமர் அவர்களின் கவனத்திற்கும் எல்லை மீள் நிர்ணய குழுவின் தலைவராக உள்ள முன்னால் தேர்தல் ஆணையாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினரின் பிரேரணையினை வரவேற்பதுடன் கடந்த காலங்களிலே இந்த எல்லை நிர்ணயம் தொடர்பான விடயம் பாதிப்பை எமது பிரதேசங்களில் ஏற்படுத்தி இருந்தது. ஏற்கனவே இது தொடர்பாக சபையில் பேசியிருந்தோம். கிராம சேவகர் பிரிவு இங்கு இருக்கும் வாக்களிப்பார்கள் அம்பகமுவ பிரதேச சபையிற்கு கடந்த காலங்கள் ஒன்றாக இருந்த கிராம சேவகர் பிரிவு இரண்டாக பிரிவதனை கடந்த தேர்தலில் கண்டுள்ளோம். இதற்கு அவசரமான ஆவணமொன்றை தயாரித்து பாதிப்பை சுட்டிக்காட்டி அனுப்ப வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போதுள்ள எல்லை நிர்ணயத்தில் உள்ள சமுர்த்தி கட்டமைப்பில் பிரச்சினை உள்ளது

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக கடிதம் சமுர்த்தி அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வடக்கிழக்கில் 300 பேருக்கு கூட ஒரு கிராம சேவகர் இருக்கும் போது அவர்களுக்கே இது ஒரு பிரச்சினையாக உள்ளது. நமது பிரதேசத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு 7000 பேர் உள்ளனர் 02 கிராம சேவகர் பிரிவுகளை இணைத்தால் கிட்டதட்ட 14000 பேர் வருவார்கள். 10,000பேருக்கு ஏனைய இடங்களில் ஒரு பிரதேச செயலகமே உள்ளது. எனவே இவ்விடயத்திற்கு சிறந்த தீர்மானமொன்றை எடுக்கவும்.

**தீர்மான இல 05**

எல்லை நிர்ணய விடயம் தொடர்பாக கௌரவ பிரதமர் அவர்களுக்கும் எல்லை நிர்ணய சபையின் தலைவர் மகிந்த தேசபிரிய அவர்களுக்கும் கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

எனது அடுத்த பிரேரணையானது மின்சார பட்டியல் கட்டண அதிகரிப்பு தொடர்பானதாகும், நிறைய பேர் நினைக்கலாம் ஏன் இவ்விடயத்தை இங்கு பேச வேண்டும் என்று, ஏனென்றால் பேச வேண்டிய கட்டாயம். மின்சாரம் இன்று எவ்வாறு கூட்டப்பட போகின்றது என்ற விடயம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

அதாவது ஒன்றுக்கு மூன்று வீதம் என்ற வகையில் அதிகரிக்கப்பட உள்ளது. எரிசக்தி அமைச்சர் கட்டணத்தை கட்டாயமாக அதிகரிக்கப்படும் என்று கூறியுள்ளார். மின்சார கட்டணம் அதிகரிக்கப்படுமாயின் ஏனைய அனைத்து பொருட்களினதும் விலைகள் அதிகரிக்கப்படும். சிறிய தொழில் புரிவோரின் தொழில் முடக்கப்படும். இங்குள்ள நீர் தேக்கங்களிலூடாக தான் முழு இலங்கைக்கும் மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் மின்சாரத்தின் கட்டண அதிகரிப்பு தொடர்பாக மிகவும் பாதிக்கப்பட போவது அதிகமாக பெருந்தோட்ட துறை மக்கள் தான். இதற்கான வேலைகளை கட்டங்கட்டமாக செய்திருக்கலாம். நிவாரணம் தான் வழங்கி வந்தோம் என்று கடந்த காலங்களில் கூறினர். நாட்டின் பொருளாதார நிலையினை கருத்திக்கொண்டு முழு சுமையினையும் மக்கள் மீது செலுத்துவது வேதனைக்குரிய விடயம். இக்கட்டணம் அதிகரிப்புக்கு எமது எதிர்ப்பை வெளியிடுவதாக கடிதமனுப்புமாறு கேட்டுகொள்கின்றேன்.

**தீர்மான இல 06**

மின்சார கட்டண அதிகரிப்பின் காரணமாக பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுக்கவுள்ள பிரச்சினை தொடர்பாக எரிசக்தி அமைச்சருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**